மதம் சார்ந்த தீவிரவாத வெறித்தனத்தையும், இனவாதத்தையும் தோற்கடித்து தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பையும் தேசிய ஒற்றுமையையும் உறுதிப்படுத்துவதற்காக

# நாட்டின் முன்வைக்கின்ற விஷேட ஆலோசனைகள்

மக்கள் விடுதலை முன்னணி

## மதம் சார்ந்த தீவிரவாத வெறித்தனத்தையும், இனவாதத்தையும் தோற்கடித்து தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பையும் தேசிய ஒற்றுமையையும் உறுதிப்படுத்துவதற்காக

# நாட்டின் முன் வைக்கின்ற விஷேட ஆலோசனைகள்

கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தற்கொலைதாரிகளான இஸ்லாம் மதவெறிபிடித்த தீவிரவாதிகளால் கத்தோலிக்க மத ஸதானங்கள் பலவற்றுக்கும் உல்லாச ஹோட்டல்கள் மீதும் தொடுக்கப்பட்ட குண்டுத் தாக்குதலுடன் இலங்கையின் பொது மக்களின் பாதுகாப்பும், பொதுவான சமூக வாழ்வும் பாரிய அச்சுறுத்தலுக்கும் சவாலுக்கும் உள்ளாகியது. இந்த தாக்குதலுடன் இலங்கையின் அரசியலிலும் பல சவால்கள் தோன்றின.

இத்தாக்குதலை தேசிய தௌஹித் ஜமாத் எனப்படும் இஸ்லாம் மதவெறிபிடித்த அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலென்பது நிரூபணமாகியுள்ளது. இத்தாக்குதல் இலங்கையில் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் இதற்கு மத்திய கிழக்கில் இயங்கிவருகின்ற ISIS எனும் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பிருந்ததாகவும் தெரியவந்துள்ளது. இந்த தீவிரவாத அமைப்பு இலங்கையில் வளர்ந்து போஷிக்கப்பட்டது முன்னைய ஆட்சியாளர்களின் புரிந்துணர்வுடன்

என்பதுடன், இலங்கையில் இனவாத அடிப்படையில் பதவி பேராசை பிடித்த அரசியல் அதற்கு உறுதுணையாக அமைந்துள்ளது என்பதும் தெளிவாகிறது.

மறுபுறத்தில் இந்த தாக்குதலுக்கான கருத்தியலும், எடுத்துக்காட்டு மற்றும் ஆன்மீக ஊக்குவிப்பையும் அளித்த ISIS போன்ற பயங்கரவாத தீவிரவாத அமைப்பு உலகத்தில் தற்செயலாகத் தோன்றவில்லை, உலகில் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கத்தை கைபற்றுவதற்காக அந்த பிராந்தியத்தில் ஐக்கிய அமெரிக்காவுக்கு அடிபணியாத அரசாங்கங்களை வீழ்த்துவதற்கு, அல்லது அவற்றை நலிவடையச் செய்வதற்காக ஐக்கிய அமெரிக்காவின் நேரடி மற்றும் மறைமுக பங்களிப்பு இருந்தது என்பதே உண்மையாகும். 1980ஆம் தசாப்தத்திலிருந்து சோஷலிச முகாம்களை பலவீனமடையச் செய்வதற்காகவும் அதன் பின்னர் மத்திய கிழக்கில் எண்ணெய் வளத்தை சூறையாடுவதற்கும் மறைமுக கரங்களாக ஐக்கிய அமெரிக்கா இந்த பயங்கரவாத தீவிரவாத அமைப்புகளையே பயன்படுத்தி வந்துள்ளது. அதனால் உலகம் முழுவதிலும் பரவிவரும் இந்த மதம் சார்ந்த தீவிரவாதமும் உலக பயங்கரவாதத்துடன் ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்தியவாதிகளுக்கு உள்ள தொடர்பை மூடிமறைக்க முடியாது.

மறுபுறத்தில் இவ்வாறான தீவிரவாதமும் பயங்கரவாத நடவடிக்கையும் மற்றும் இன மோதலகள் உருவாவதற்காக நமது நாடுகளில் நிலவுகின்ற இனவாத, மதவாத, தீவிரவாத கருத்தியல் மற்றும் மனநிலையும் உதவியிருப்பது தெளிவு. ஒவ்வொரு இனவாதமும் மத தீவிரவாதத்தால் ஏனைய சாராரின் இனவாதத்தையும், மதத் தீவிரவாதத்தையும் போஷித்து வருவது உண்மையாகும். இந்த அனைத்து இனவாதத்திற்கும், மதம்சார்ந்த தீவிரவாதத்திற்கும் பின்னாலிருப்பது, இலங்கை இனவாதத்தின் அடிப்படையில் அதிகாரத்தை கைப்பற்றுவதைக் குறிக்கோளாகக் கொண்டு அரசியல் செய்யும் அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் ஆகியன என்பதை மறைக்க முடியாத உண்மையாகும். அவர்களால் விதைக்கப்படும் இனவாதத்தை சிலவேளைகளில் அவர்களாலேயே கட்டுப்படுத்த முடியாது போகும் என்பது உண்மையாகும்.

இத்தாக்குலின் பின்னர் நாட்டில் தோன்றியுள்ள பாதுகாப்பற்ற நிலையும், அச்சமும், சந்தேகம் மற்றும் நம்பிக்கையீனமும், விசேடமாக தோன்றியிருக்கின்ற கடுமையான முஸ்லிம் எதிர்ப்பும், இந்த சம்பவத்தை அரசியல் நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கான முயற்சிகளால் மக்கள் வாழ்நிலையை சமநிலைப்படுத்துவதற்கும், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்துவதற்கும் தடையாக அமைந்துள்ளது.

அதனால் தேசிய பாதுகாப்பும் பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். அதை நிவர்த்திசெய்ய முடிவது இனவாதங்களை தூண்டுவதன் மூலம் மென்மேலும் பிரிந்து தனிமைபடுத்துவதினால் அல்ல தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதன் மூலமே ஆகும். தேசிய ஒற்றுமை இல்லாத இடத்தில் தேசிய பாதுகாப்பையோ அல்லது பொதுமக்கள் பாதுகாப்பையோ உறுதிப்படுத்த முடியாது. இதனால் "தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பிற்காக தேசிய ஒற்றுமை" எனும் சுலோகத்தை முன்னுதாரணமாகக் கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும்.

இலங்கையில் வாழுகின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம், பர்கர், மலே ஆகிய அனைத்து இனப் பிரிவினரும் தத்தமது கலாசார வேறுபாட்டை கொண்டு செல்வதில் அனைவரினதும் கலாசார பன்முகத் தன்மைக்கு மதிப்பளிக்கவேண்டும். ஆனால் அந்த கலாசார தனித்துவங்கள் இலங்கையர்களாக ஐக்கியப்படுவதற்கும், ஒன்றுபடுவதற்கும் தடையாகவிருக்கும், பிரிந்து செல்லும் திசைக்கோ சந்தேகம் நம்பிக்கையின்மையை உருவாக்ககின்ற திசையை நோக்கியதாகவோ அமையக் கூடாது. அனைவரும் இலங்கையர்களாக சிந்திப்பதற்கான சூழலையும் கருத்தியலையும் தோற்றுவிக்க வேண்டும்.

இந்நிலைமையின் கீழ் இனவாத மற்றும் மதவாத தீவிரவாத தாக்குதல் மற்றும் மோதலை தவிர்ப்பதற்கும் மீண்டும் இவ்வகையான துயரங்களை உருவாக்காதிருப்பதற்கும் நாட்டின் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பி பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் ஒரு நாடு என்ற வகையில் நிறைவேற்றப்பட வேண்டுமென நம்புகின்ற நாங்கள் கீழ் காணும் ஆலோசனைகளை இவ்வாறு நாட்டிற்கு முன்வைக்கின்றோம்.

## பொதுவான மறுசீரமைப்பு ஆலோசனைகள்

1. இலங்கையில் சிங்களம், தமிழ், முஸ்லிம், பர்கர், மலே சகல இனங்களையும் சார்ந்த ஒவ்வொரு பிரஜைகளுக்கும் சமத்துவமான உரிமைகளுடனான மக்கள் ஆட்சியாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

2. இலங்கையில் எந்தவொரு மதத்தைத் தழுவுவதற்கான உரிமையையும், எந்தவொரு நபருக்கும் தான் விரும்பும் எந்தவொரு மதத்தையும் தழுவுவதற்கான உரிமையையும் முற்றாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3. இலங்கையில் அனைத்து நபர்களையும் இன, மத, பால் வேற்றுமையில்லாது அனைத்து நபர்களையும் குற்றவியல் மற்றும் சிவில் சட்டங்கள் மத்தியில் சமனானவர்களாகக் கருத வேண்டும். சமனாக நிர்வகிக்க வேண்டும்.
தற்போது இன, மத, பால் அடிப்படையில் வித்தியாசம் காட்டும் சட்டங்களை பொதுச் சட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். மத உரிமை தனிப்பட்டதாக இருந்தாலும், சட்டங்கள் அரசுக்கு உரியதாகும். மதம் தொடர்பாக நிலவும் சட்டங்கள் அல்லது சம்பிரதாயங்கள் பொதுச் சட்டத்திற்கு சவாலாக அமையாமல் இருப்பதோடு பொதுச் சட்டமே எப்பொழுதும் வலுப்பெற வேண்டும்.

4. இன, மத மற்றும் பிரதேச அடிப்படையில் அரசியல் கட்சிகளை ஆரம்பித்து முன்னெடுக்கப்படுதல், பதிவுச்செய்தல், ஆகியவற்றை த் தடைசெய்வதற்காகச் சட்டத்தைத் தயாரிக்க வேண்டும்.

5. இனவாத மற்றும் மதவாத மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள பல நாடுகளில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளவாறு மக்களிடையே கட்டியெழுப்பட்டுடிருக்கின்ற சந்தேகம், வைராக்கியம் மற்றும்

நம்பிக்கையின்மை ஆகியவற்றை முற்றாக ஒழிப்பதற்கு உண்மையை கண்டறியும் ஆணைக்குழு (Truth and Reconciliation Commission) உடனடியாக நிறுவப்பட வேண்டும்.

6. இன ரீதியாக, மத ரீதியாக, சாதி அல்லது பால் வேறுபாட்டையும் ஒடுக்குமுறையையும் தடுப்பதற்காக பாகுபாட்டுக்கு எதிரான ஆணைக்குழு (Commission Against Discrimination) நிறுவப்பட வேண்டும். அந்த ஆணைக்குழுவின் கீழ் பாராபட்சமாக கையாளுதல்களை மக்களுக்கு எந்த வேலையிலும் முறைப்பாடு செய்யக்கூடிய முரண்பாட்டுக்கு எதிரான கண்காணிப்பு நிலையமொன்றை (Discrimination Monitoring Centre) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நிறுவப்பட வேண்டும். அதன்மூலம் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் அந்த நிலமைகள் கூடுதலான பிரதேசங்களில் பாகுபாட்டை கட்டுப்படுத்துவதற்காக வேண்டிய பரிந்துரைகளை ஆணைக்குழுவின் ஊடாக அடிக்கடி அரசாங்கத்திற்கு ஆலோசனைகளாக வழங்க வேண்டும்.

7. குரோதப் பேச்சுக்களை முன்னெடுத்துப் பிரசாரப்படுத்தல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் சட்டம் (Anti Hate Act) அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

## பொதுமக்கள் பாதுகாப்பு

1. பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தும்போது வெளிநாடுகள் அல்லது பாதுகாப்பு அமைப்புகளுடன் (NATO போன்ற) ஒப்பந்தங்கள் கைசாத்திடுகின்றபோது நாட்டின் இறையாண்மைக்கும் தன்னாட்சிக்கும் பாதகமானவைகளைக் கைசாத்திடக் கூடாது என்பதுடன், அவ்வாறு கையொப்பம் இடுவதற்கு முன்னர் அவைகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டுவது பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவின்றி, அனுமதிக்கக் கூடாது.

2. நாட்டில், தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு தொகுதியும் விஷேடமாக நாட்டின் நிதிச் சேவைகளுக்கான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் தொகுதியில் நாட்டின் மின்சக்தி சேவைக்கான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் தொகுதி நிர்வாகம், கண்காணிப்பு முழுமையாக அரச நிறுவனத்தின் ஊடாக மட்டுமே முன்னெடுக்கப்பட வேண்டும்.

3. வெளிநாடுகளில் பயங்கரவாத அமைப்புகள் மற்றும் வெளிநாட்டு அமைப்புகளுடன் செயற்பட்ட நபர்களை இலங்கைக்குள் வருவதை தடுக்கும் வகையில் (Foreign Fighter Act ) என்ற சட்டத்தை உருவாக்க வேண்டும்.

4. அரசியல் அல்லது மத அல்லது நலன்புரி அல்லது தனிபட்ட அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் அமைப்புகள் பாராளுமன்றத்தில் சட்டத்தின் மூலமாக ஸ்தாபிக்கப்படுத்தல் சில காலங்களாக தீவிரமாக அதிகரித்திருப்பதுடன், அதனூடாக பாராளுமன்றத்தில் ஸ்தாபிக்கபடுவதால் கிடைக்கின்ற அரச அங்கிகாரத்தினால் தீவிரவாத மற்றும் மோசடிச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் பாரியளவிலான ஆபத்தை தோற்றுவிப்பதாக அமைந்துள்ளன. இவ்வாறான அமைப்புகளை பாராளுமன்றத்தில் ஸ்தாபிக்கப்படுவதை வரையறை செய்து கண்காணிப்பு செய்வதற்கான மாற்றங்களை பாராளுமன்ற நிலையியற் கட்டளையில் முன்னெடுக்கப்படவேண்டும்.

5. அவ்வாறான அமைப்புகள் ஸ்தாபிப்பானது அவை குறிப்பிட்ட நடைமுறையில் செயற்பட்டவைகளாக இருத்தல் வேண்டும். அந்த அமைப்புகள் ஒரு மதத்திற்கோ, ஒரு இனத்திற்கோ மட்டும் சேவை வழங்குபவையாக அமையக் கூடாதிருப்பதுடன் அவைகளின் கட்டுப்பாட்டுச் சபை ஒரு குடும்பத்திற்கோ உறவுமுறையுள்ள சில குடும்பங்களுக்கு வரையறுக்கக் கூடாது.

6. அரச புலனாய்வுப் பிரிவு அல்லது பல்வேறான பாதுகாப்பு

பிரிவுகளில் மதவாதம், இனவாதம் மற்றும் தீவிரவாத அமைப்புகளை கட்டியெழுப்புதல், முன்னெடுத்துச் செல்லல், உதவுதல், பாதுகாப்பு வழங்குதல் தொடர்பில் தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு முழுமையான அதிகாரம் கொண்ட ஆணைக்குழுவை நிறுவவேண்டும்.

7. அரசியல் மற்றும் ஏனைய அழுத்தங்கள் காரணமாக அரச அதிகாரிகள் அரசியலமைப்பு மற்றும் சட்ட ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு அப்பால் நாட்டின் பாதுகாப்பு மக்களின் அமைதிக்கு மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் அழுத்தம் கொடுக்கும் அவ்வாறான சரியான சந்தர்ப்பங்களில் அதனை செயற்படுத்தாமலிருப்பதற்கும். அவைகளை உயர் நீதிமன்றத்திற்கு எழுத்துமூலமாக முறைப்பாடு செய்வதற்கு மற்றும் தேவையான சந்தர்ப்பத்தில் மக்களைத் தெளிவுப்படுத்தும் அதிகாரிகளுக்கு உரிமைகள் கிடைக்கும் சட்டத்தை (Whistle Blowers Act) தயாரித்தல் வேண்டும்.

## சட்ட மறுசீரமைப்பு

1. நாட்டில் சகல பிரஜைகளுக்கும் உரித்துடைய பொது சட்டத்தை உருவாக்க வேண்டும். அதற்காக தற்போது இருக்கும் முஸ்லிம் சட்டம், மலைநாட்டு சட்டம், தேசவழாமைச்சட்டம் எனும் தனியார் சட்டம் ஆகியன திருத்தப்பட்டு ஒரு பொதுவான திருமண சட்டம் சகல இனக்குழுக்களும் பின்பற்றுவதற்கு அமைவானதாக இருக்க வேண்டும். அதேபோன்று அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கும், இன, மத, ஆண், பெண் பாகுபாடின்றி அனைவரும் சமமானவர்கள் எனும் கோட்பாட்டின் அடிப்படையில் சகல சட்டங்களையும் தயாரிக்க வேண்டும்.

2. சிறுவர் மற்றும் பெண்கள் சமத்துவம் மற்றும் அரசியலமைப்பில்

உள்ள அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் அடிப்படையில்,

i. திருமணம் செய்வதற்கான வயது பொதுவாக 18 ஆக கருதப்படல் வேண்டும்.

ii. ஒன்றுக்கு மேற்பட்ட திருமணத்துக்கு சட்டத்தில் இருக்கும் தளர்வை இரத்துச் செய்தல்.

iii. திருமணத்தில் சொத்துக்களை ஒப்படைக்கும் போது பெண்களுக்கு இழைக்கப்படும் பாகுபாட்டுச் சட்டத்தை இரத்துச் செய்தல்.

iv. திருமணத்தில் தங்களுடைய இன, மத, மொழி மற்றும் சாதி அடிப்படையில் அழுத்தம் கொடுக்காமல் அதனை தன்னுடைய விருப்பமின்றி மாற்றுவதற்கு அழுத்தம் கொடுப்பதற்கும் தடைவித்தல்.

v. திருமணப் பதிவு மற்றும் விவாகரத்து ஆகிய செயற்பாடுகளின் போது சிவில் நிர்வாக மற்றும் சாதாரண நீதிமன்ற தொகுதி நடவடிக்கைகளின் கீழ் உள்ளடக்குதல்.

vi. இலங்கை அரசியலமைப்பில் அல்லது இலங்கையில் நடைமுறையில் உள்ள சட்டத்தைத் தவிர வேறு எந்தவொரு சட்டமும் இலங்கையில் பிரச்சாரப் படுத்துவதற்கோ செயற்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்காமலிருத்தல்.

## மத நிறுவனங்களின் மறுசீரமைப்பு மற்றும் நிர்வாகம்.

1. சகல மதங்களுக்குமான அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தந்த மதங்களின் பிரதானிகள் மற்றும் மதம் தொடர்பில் கற்றறிந்தவர்கள் அடங்கிய மத சபைகள் அமைக்க வேண்டும்.

அந்தந்த மதங்களின் வழிபாட்டிடங்கள் நிர்வாக நடவடிக்கைகள் இந்த மத மற்றும் சிவில் தலைமைத்துச் சபைகளால் தனித்தனியாக பொறுப்பு கூறல் வேண்டும்,

2. இந்த மதச் சபைகளின் பிரதான பிரதிநிதிகள் அடங்கிய சர்வமத செயலாளர் காரியாலயமும் சபையையும் அரச தலைவரின் மத அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சரின் கீழ் நிறுவப்படவேண்டும்.

3. சகல மதங்களுக்கும் ஒரு அமைச்சு நிறுவப்பட வேண்டும்.

4. மத வழிபாட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் விசாலமாக்குதல் ஆகியன சர்வமதச் சபையின் அனுமதியுடன் குறித்த உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மதங்களுக்குப் பொறுப்பான அமைச்சின் அனுமதியுடன் மட்டும் நிறுவுதல்.

5. சகல மதங்களுக்கும் இடையில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் அவநம்பிக்கை மற்றும் சந்தேகம் ஆகியவற்றை களைவதற்கு அந்தந்த மதங்களின் தலைவர்கள் மற்றும் போசகர்ளுடன் இணைந்தும் மீளாய்வுச் செயற்றிட்டங்களை தேசிய மற்றும் உள்ளூர் மட்டங்களின் முன்னெடுக்கப்பட வேண்டும்.

6. மத நிறுவனங்களை மேற்பார்வை செய்வதற்காக தற்போதிருக்கும் சட்டங்களை முறையாக மேற்பார்வை செய்யும் விதத்தில் திருத்தியமைத்தல்

## கல்வி

1. இலங்கையில் கல்வி நிறுவனங்கள், பாலர் பாடசாலைகளையும் ஏனைய பாடசாலைகளையும் உயர்கல்வி நிறுவனங்களையும் இன, மத அடிப்பயையில் நிறுவப்பட்டுள்ளதை இரத்துச் செய்தல்.

2. சகல பாடசாலைகளுக்கும் மாணவர்களை தேர்ந்தெடுக்கும் போது, சட்டம் ஒழுங்குகளை சகல இன, மத குழுமங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் திறந்துவிடுவதற்கு ஏதுவான முறையில் தயாரித்தல்.

3. சகல அரசாங்க பாடசாலைகளிலும் ஒரு தேசிய பாட விதாதைத்தைக் கற்பிப்பதற்கும் சகல பாடசலைகளிலும் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் கல்வியை வழங்குதற்கு நடவடிக்கை எடுத்தலுடன் வளங்களையும் பெற்றுக்கொடுத்தல்

4. தொடக்கமாக சகல பாடசாலைகளிலும் ஆரம்பப் பிரிவுகளில் அனைத்து இன, மத குழுக்கள் அடங்கிய கலப்புப் பாடசாலையாக நடத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

5. சகல தனியார் மற்றும் சர்வதேசப் பெயரில் முன்னெடுக்கப்படும் சகல பாடசாலைகளிலும் இலங்கை மாணவர்களுக்கு கற்பித்தலின்போது பொது தேசிய விடயதானங்களை அல்லது நாட்டில் கலாசார சமூக போக்குகள் பற்றி புரிதல் ஏற்படும் விதமாகப் பாடவிதானங்களைத் தயாரித்தல்

6. சகல பாடசாலைகளிலும் பிரதான மதங்களுக்குரிய மத உள்ளடக்கம், கலாசாரம் ஆகியவை தொடர்பில் மாணவர்களுக்கு கற்பிக்கக்கூடிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்தல்

7. நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் பொதுவான நாற்காட்டியை (கலண்டர்) உருவாக்குவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

8. பாடசாலை மற்றும் விடயதான உரையாடல் புத்தகங்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் சகல மாணவர்களுக்கும் நாடு தொடர்பிலான பற்று மற்றும் மரபுரிமை தொடர்பிலும் ஆர்வம் ஏற்படும் வகையிலும்

நாட்டின் வரலாறு தொடர்பில் பண்புரீதியான புரிந்துணர்வு ஏற்படும் வகையிலும் பல்வகையான மக்களின் கலாசார, பண்பாட்டு நம்பிக்கை தொடர்பில் கவனஞ்செலுத்தும் வகையிலும் பல்லினம் பல்மதம் நாட்டின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை கட்டியெழுப்பும் நோக்கில் தகுதியான மற்றும் விஞ்ஞான அடிப்படையிலும் பகுப்பாய்வுச் செய்தல்.

9. 18 வயது குறைந்த எந்தவொரு பிள்ளைக்கும் சாதாரண பொதுப் பாடநெறிகளைக் கற்பிக்காத மதக் கல்வியை மட்டும் போதிககின்ற கல்வி நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு முடியாதவாறு சட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல். தற்போது இவ்வாறு நடத்திச் செல்லப்படுகின்ற மத பாடசாலைகள் தொடர்பில் பூரணமான மீளாய்வொன்றை கல்விமான்கள் சபையொன்றினால் முன்னெடுத்து அதன்மூலம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பாடசாலைகளுக்காக பொதுவான தேசிய பாடநெறியை அறிமுகம்செய்தல். மேலதிக மதம் தொடர்பான அறிவு தேவைப்படும் பிள்ளைகளுக்கு சாதாரண அறநெறி பாடசாலைகளில் அதை கற்பித்தல்

10. மதப் போதகர்களுக்கு பயிற்சியளித்தல் மதம் தொடர்பிலான செயலாளர் காரியலாயத்தில் மற்றும் மதம் தொடர்பிலான அமைச்சு மற்றும் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் கண்காணிப்பில் மட்டும் முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்தல் மற்றும் மத நிறுவனங்களுக்காக கிடைத்திருக்கும் சான்றிதழை அந்த நோக்கத்திற்கு புறம்பாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயன்படுத்துவதற்கு உள்ள உரிமையை இரத்துச் செய்தல்.

11. பாராபட்சிமின்றி சகல பாடசாலைகளிலும் இனம் அல்லது மத அடிப்படையில் இன்றி சகல பிள்ளைகளுக்கும் அழகியற் கல்வியை கற்பிப்பதற்காக சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அதற்காக ஆசிரியர்களை பயிற்றுவித்தல், தற்போது

மத அழுத்தங்களின் காரணமாக தடைக்கு உள்ளாகியுள்ள பிள்ளைகளுக்கு அழகியற் பாடநெறியான சித்திரம், சங்கீதம், நடனம், சினிமா, நாடகம் மற்றும் அரங்கக்கலை போன்ற பாடங்களுக்காக ஊக்குவிப்பதற்காக பெற்றோர்கள் மற்றும் சமூகத்திற்கு ஆதரவளித்தல்.

12. பிரசைகள் கல்வி என்ற விடயதானத்தின் கீழ் இந்நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம், பர்கர். மலே கலைஞர்கள் நிபுணர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் தொடர்பான தரவுகளை உட்படுத்தல்.

13. வெசாக், நத்தார், புத்தாண்டு, சிவராத்திரி, ரம்ழான் ஆகிய உற்சவ காலங்களில் சகல மாணவ மாணவிகளும் பொதுவாக பங்குப்பற்றும் உற்சவம், கலாசாரம் மற்றும் கலையம்சங்களை பாடசாலை மட்டங்களில் நடத்துதல்.

**இலங்கையர்கள் என்ற அடையாளத்தை உருவாக்குவதற்காக அரச நிறுவனங்கள் மற்றும் பொதுவான மறுசீரமைப்புகள்**

1. அரச நிறுவனங்களுக்குள் இலங்கையர் என்ற அடையாளத்தை உறுதிபடுத்தும் விதமாக செயற்படுவதற்கு பொறுப்பேற்றல்

2. அரச மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அனுமதியின்றி மற்றும் விசேடமான மத வழிபாட்டு தேவைகளின்றி பொது இடங்கள் மற்றும் நிலையங்களில் மத அடையாளங்களை நிர்மாணிப்பதற்கு அனுமதி மறுத்தல்

3. மக்கள் தாம் விரும்பும் இடத்தில் குடியேறுவதற்கு இருக்கும் உரிமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், மீள்குடியேற்றமோ அல்லது புதிய வீட்டுத் திட்டங்களை உருவாக்கி குடியேறுவதில் பல்வேறு இன, மத குழுக்கள்

பரஸ்பரம் ஒன்றுகலக்கும் விதமாக (Intergration) செயற்படல், அதற்காக மீள்குடியேற்றத்திற்கு புதிய வீட்டுத் திட்டங்கள் மற்றும் புதிய குடியிருப்புத் தொகுதிகளை விரிவாக்கம் செய்யும்போது கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகளுக்கு அந்தந்த மாவட்டச் செயலாளர்களின், உள்ளூராட்சி நிறுவனங்களின், தலைமையில் நடவடிக்கை எடுத்தல், சகல உள்ளூராட்சி நிறுவனங்களிலும் சமூக ஒருங்கிணைப்புப் பிரிவொன்றை (Community Intergration Unit) நிறுவுதலை ஆரம்பித்தல். எந்தவொரு உள்ளூராட்சி பிரதேசங்களிலும் வீதிகளின் பெயரை இன, மதத்தின் நாமங்களாகக் கொண்டிருக்காமை.

4. தனியார் நிறுவனங்கள், வியாபாரா ஸ்தானங்களின் பெயர் பலகைகளில் (வழிபாட்டிடங்களை தவிர) மத மற்றும் இன அடையாளத்துடன் கூடிய பெயர்களை உள்ளடக்காது இருத்தல் வேண்டும்.

5. சமூகத்தில் ஒவ்வொருவருக்கும் இடையில் சந்தேகம், நம்பிகையின்மை மற்றும் அடையாளம் கண்டுகொள்ள முடியாத வகையில் ஆடைகள் அணிவதை நிறுத்தல் (உதாரணமாக புர்கா, முகத்தை முழுமையாக மூடும் தலைக்கவசம் ஆகியன.)

6. குறிப்பிட்ட மொழியை கற்பிக்கும் இடங்களைத் தவிர பிரசித்திபெற்ற இடங்களில் மற்றும் சொத்துரிமைகளில், விளம்பர பலகை, தமிழ், சிங்கள், ஆங்கில மொழிகளில் அடையாளப்படுத்தல் வேண்டும்.

7. அரச மொழிச் சட்டத்தை பலப்படுத்தி, சிங்கள மற்றும் தமிழ் மொழிகளை செயற்படுத்தல்.

8. இலங்கை, சிங்கள, தமிழ், முஸ்லிம், பர்கர், மலே அகிய சகல இனப்பிரிவுகளுக்கும் சமனான உரிமை உள்ளது என பிள்ளைகளை சிறுவயதுமுதல் புரிய வைத்தல், இலங்கையில் இருக்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் பௌத்த, ஹிந்து, கத்தோலிக்கம், இஸ்லாம் கலாசாரம் மரபுரிமைகள் தொடர்பிலான கவனத்தையும் அன்பையும் பிள்ளைகள் மத்தியில் உருவாக்குதல்.

9. பொது போக்குவரத்து மற்றும் தொலைதொடர்பு நிறுவனங்களின் விளம்பரங்களிலும் ஒவ்வொரு தனியார் நிறுவனத்தின் விளம்பரங்களிலும் இன, மத சகவாழ்வை மேம்படுத்தும் இலங்கையின் மீதான அன்பை ஏற்படுத்தும் சுலோகங்களை பரவலாக காட்சிப்படுத்தல்.

## ஊடகம்

1. ஊடகத்தை பயன்படுத்தும் போது மத உற்சவ சந்தர்ப்பங்களைத் தவிர இன மற்றும் மதத்தை மேம்படுத்தும் வகையில் அறிக்கையிடுதலை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல்

2. இலத்திரனியல் அச்சு மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி இனங்களுக்கிடையில் சந்தேகம் மற்றும் நம்பிக்கையின்மையை உருவாக்குவதை தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

3. இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களை பயன்படுத்தி மக்களுக்கிடையில் மூடநம்பிக்கையை வியாபிப்பதற்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.

4. முழுமையாக ஒரு மதத்தை மட்டும் பிரசாரம் செய்யும் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஆகியவற்றுக்கு வரையறை விதித்தல். சகல மதங்களுக்கும் சாதாரண பிரசாரங்களை வழங்கும் வகையில் நிகழ்ச்சிகளை தயாரித்தல்

5. இன ஒற்றுமை மற்றும் மக்களுகிடையே அமைதி ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் ஊடகங்களை பயன்படுத்தும் ஒழுங்குகளை தயாரித்தல் மற்றும் அந்த ஒழுங்குகளை மீறுகின்றவர்களுக்கு எதிராக சுயாதீன ஊடக அதிகார சபையின் ஊடாக நடவடிக்கை எடுத்தல்.

6. ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் ஊடாக முன்னெடுக்கப்படும் மத துன்புறுத்தல் செய்திகள், கொச்சைப்படுத்தல் வைராக்கியம் உள்ளிட்ட பிரசாரத்தை தடைச்செய்தல் மற்றும் கண்காணிப்பு முறைமையை தயாரித்தல்.

## மத கல்விமான்களுக்குரிய விசேட கடமையும் பொறுப்பும்

1. மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கும் நேரடியாக மதச்சார்பற்ற சமூகச் செயற்பாடுகளுக்கு மத நிறுவனங்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற கட்டுப்பாடுகள் மற்றும் தேவையற்றத் தலையீடுகளை குறைபப்தற்குத் தேவையான சட்டவிதிகளைப் புத்திஜீவிகளால் தயாரித்தல்.

2. முஸ்லிம்கள் வர்த்தகம் மற்றும் மதச் செயற்பாடுகளுக்கு மட்டும் என வரையறுக்கப்பட்ட பிரசைகளாக படிப்படியாக தள்ளப்பட்டு வருவதை காணமுடிகிறது. ஒப்பீட்டளவில் ஏனைய சமூகத்திலிருந்து விலகி நிற்கின்றனர். மக்களிடையே புரிந்துணர்வு கட்டாயம் தேவையென்பதால் கலைச் செயற்பாடுகள்,

தொழிற்சங்க நடவடிக்கைகள், பெண்கள் அமைப்புகளின் செயற்பாடுகள் விளையாட்டு மற்றும் ஏனைய பொது சமூக வாழ்க்கையுடன் ஒன்றுகலப்பதற்கு அவர்களை ஊக்குவித்தல்.

3. இன, மத அடையாளங்களைப் பிரசாரப்படுத்தல் மற்றும் அதனை குறைப்பதற்குத் தேவையான சந்தர்ப்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி இணக்கப்பாட்டை ஏற்படுத்தல்

4. இலங்கையில் இன மற்றும் மதச் சமூகங்களின் குழுக்கள் பரஸ்பரமும் அவற்றுக்குள் பிளவுபடுத்துகின்ற தேசிய மற்றும் சர்வதேச தீவிரவாதப் போக்குகள் தொடர்பில் ஆய்வு மற்றும் கண்காணிப்பு செலுத்தி அதிலிருந்து விலகிக் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

5. ஏனைய இனங்களுக்கிடையே சர்வதேச மட்டத்தில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் இஸ்லாத்துக்கு எதிரான கருத்துக்களின் தாக்கத்தை குறைப்பதற்காக இஸ்லாமிய கலை, கலாசார நடவடிக்கைகளையும், இலக்கியத்தையும் மக்கள்மயப் படுத்துவதற்கும் நாட்டின் பொதுவான கலைலத்துறையில் முஸ்லிம் கலைஞர்களின் பங்களிப்பை விரிவுபடுத்தலும்

6. இலங்கையில் முஸ்லிம் பெண்களுக்குள்ள (சிங்களம் மற்றும் தமிழ்ப் பெண்களை ஒப்பிடும்போது) வரையறை சில முஸ்லிம் நாடுகளிலும் இல்லையென்பது முஸ்லிம் நிபுணர்களின் கருத்தாகும். ஆகையால் முஸ்லிம் பெண்களுக்கு நாட்டின் ஏனைய பெண்களுடன் பொது சமூக கலாசார வாழ்க்கையில் உள்நுழைவதற்கான ஆகக்குறைந்த வழிகளை முஸ்லிம் சமூகம் நிர்மாணித்துகொடுத்தல்.
(இலங்கையின் நிலவரங்களோடு நெருக்கமான பல கலாசார பின்னணியுடனான நாடுகளில் முஸ்லிம் மக்களின் அனுபவங்களை முஸ்லிம் சமூகத்திற்கு தெரிவிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்.)

**மக்கள் விடுதலை முன்னணி**

464/20, Pannipitiya Road, Pelawatte, Battaramulla
Tele:- +94 112786355 | +94112785612
Fax:- +94 112786050
Email:- jvpnewsroom@gmail.com
Web:- www.jvpsrilanka.com
Video:- video.jvpsrilanka.com
FB:- www.facebook.com/jvpsrilanka